தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 02 November 2025
DOI: https://doi.org/10.63300/tm040211

# The Divine Light in Thiruvasagam

**N.Saravanan[1], Dr.S.Maheswari[2]**
[1]Tamil Research Scholar(Part Time),Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research, Chennai, Tamil Nadu, India.
ORCID: https://orcid.org/0009-0008-3264-0586, Email: saravananprof89@gmail.com.
[2]Assistant Professor of Tamil, Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research, Chennai, Tamil Nadu, India.
ORCID: https://orcid.org/0009-0005-2165-2280

**Abstract:**

God is described as the embodiment of supreme wisdom and radiant light. In the Thiruvasagam, Lord Shiva is portrayed as divine light in many places. The concept of receiving light from the divine is also found in Christianity, while in Islam, it is said that God is filled with light so powerful that it burns everything within the distance of direct vision. Vallalar refers to God as Arutperunjothi (Supreme Grace-Light). The divine light described by Vallalar aligns closely with the ideas expressed by Manickavasagar. God, who governs the five elements (pancha bhootas), gives heat to the sun and coolness to the moon, and exists as light beyond the cosmos. Furthermore, the cosmic philosophy of Thayumanavar Swamigal suggests that the radiant light operates within humans through divine command.

**Keywords** : *Light, Radiance, Brilliance, God, Supreme Light, Supreme Wisdom*.

**References:**

1. Poet Padmadevan (Ed.), Tiruvasagam – Original Text and Commentary, Karpagam Book House, Thyagaraya Nagar, Chennai – 17, Edition – 2015
2. Holy Bible, Palko Book Centre, Chennai, Tamil Catholic Church Edition – 2008
3. Ramalinga Adigal, Thiru Arutpa, Annamalai University, Annamalai Nagar, Chidambaram, Edition – 1983
4. P. Kamalakannan, Songs of Tayumanavar – Collection of Spiritual Wisdom, Vanathi Publications, Chennai, Edition – 2019
5. K. Mohana, Doctoral Researcher, The Ethical Guidelines for Living as Shown by Vallalar, Aaytha Ezhuthu, International Tamil Studies Journal, Published – October 2018
6. Sayyid Abul A'la Maududi (Rah.), Tamil Translation of the Holy Qur'an, Islamic Service Foundation, Edition – 1996
7. Thiruvalluvar, Thirukkural, Thendral Publications, Chidambaram 01, Sixth Edition – 2003

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# திருவாசகத்தில் இறைவனின் ஒளிரூபம்

[1]**ந.சரவணன்,** முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

[2]**முனைவர்.செ.மகேஸ்வரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இறைவன் பேரறிவாளனாகவும், பேரொளி வீசுபவனாகவும் இருக்கிறான். திருவாசகத்தில் பல்வேறு இடங்களில் சிவபெருமான் ஜோதியாகவே கூறப்படுகிறார். ஒளியாகிய கடவுளிடமிருந்து ஒளி பெறுவதாக கிறித்துவ மதத்திலும், இறைவன் ஒளிபொருந்தியவன் அவன் நேரடியாக காணும் தொலைவு வரை எரிந்துவிடும் அளவிற்கு அதீத சக்தி அந்த ஒளியில் உண்டு என்பது இஸ்லாம் மதத்தில் சொல்லப்படுகிறது. இறைவனை அருட்பெருஞ்சோதி என்றே வள்ளலார் குறிப்பிடுகின்றார். வள்ளலார் கூறும் ஜோதி ரூபமான இறைசக்தி அனைத்தும் மணிவாசகப் பெருமானின் கருத்தையே ஒத்துப்போகிறது. பஞ்சபூதங்களை ஆளுமை செய்யும் இறைவன் சூரியனுக்கு வெப்பத்தையும், சந்திரனுக்கு குளிர்ச்சியையும் தந்து அண்டத்திற்கு அப்பால் ஒளியாக இருக்கிறான் என்பதும் விளங்கலாகிறது. மேலும் தாயுமானவ சுவாமிகளின் பிரபஞ்ச கொள்கையானது பிரகாசிக்கும் ஒளி மனிதனுள்ளும் இருந்து ஆஞ்ஞையில் இயங்குகிறது என்பதேயாம்.

**முக்கிய சொற்கள் (Keywords) :** ஒளி, வெளிச்சம், பிரகாசம், இறைவன், பேரொளி, பேரறிவு.

**முன்னுரை:**

பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் போன்ற இயற்கை சக்திகளையும் அவற்றை இயக்கும் இறைவனையும் வழிபடும் மரபில் தீயை வழிபடும் வழக்கம் பண்டைய தமிழர்களிடம் இருந்துவந்துள்ளது. இறைவன் ஒளி ரூபம் கொண்டவன் என்ற நம்பிக்கையில் இறைவனை வழிபடும் வழக்கமும் இருந்துள்ளது. இறைவன் ஒளி உருவம் கொண்டவன் என்பதை அறியும் வகையில் இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

**ஒளி அல்லது வெளிச்சம்:**

அறியாமை என்னும் இருளைப் போக்கும் இறைவன் பேரறிவு உடையவன் அவனே ஒளி மயமாகத் திகழ்கின்றான். பேரொளி என்பது அனைத்து சமயங்களின் நம்பிக்கையாகவே இருக்கிறது. அதற்குப் பிறகுதான் மதங்கள் வெவ்வேறு முறையான வழிபாடுகள், உருவ வழிபாடு, உருவமற்ற ஓரிறைக் கொள்கை, பரப்பிரம்மம் என்று கூறப்படுகின்றது. ஆன்மீக ஒளியை வெளிப்படுத்தும் விதமாகவே சிலைவடிவமுள்ள தெய்வங்களின் திருவுருவத்திற்குப் பின்புறம் ஒளி வட்டம் வைத்து வணங்கினார்கள்.



tamilmanam

**பேரொளியான முழுமுதற்பொருள்:**

**ஜோதியே சுடரே சூழொளி விளக்கே**
**சுரிகுழற் பணைமுலை மடந்தை**
**பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்**
**பங்கயத்(து) அயனும்மால் அறியா**
**நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்**
**நிறைமலர்க் குருந்தம்மே வியசீர்**
**ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்**
**அதெந்துவே என்றரு ளாயே" - திருவாசகம் பா.எ 458**

ஆத்ம ஜோதியே! சுயப்பிரகாசமே! சுற்றிப் பிரபை வீசும் தீபமே! சுருண்ட கேசத்தையும் செம்மாந்த தனங்களையுங் கொண்ட அம்பிகையின் பாதிப்பாகமானவனே! ஈசனே! பால்நிறத்தைக் கொண்ட திருவெண்ணீற்றைத் தரித்தவனே! தாமரைப் பூவில் வீற்றிருப்பவனான பிரம்மனும் திருமாலும் கண்டுணர முடியாத தரும சொரூபனே! ஐஸ்வர்யங்கள் நிறைந்த திருப்பெருந்துறையில் குருந்தமரத்தினடியில் எழுந்தருளிய முழுமுதற்பொருளே! எளியேன் அபிமானங் கொண்டு கூப்பிட்டால் அஃது என்ன? என்று வினவி கிருபை செய்வாயாக! என்று மாணிக்கவாசகர் இறைவனை துதிப்பதன்மூலம் இறைவன் ஜோதியாய் எழுந்தருளுவான் என்பது புலப்படுகின்றது.

திருவாசகத்தில் ஒளியின் தத்துவம் என்பது இறைவனை ஒளி வடிவமாகப் பார்த்து தன்னையும் இறைவனுடன் ஒளியில் இணைத்துக் கொள்ளுதலாகும். இது மாணிக்கவாசகரின் வாழ்க்கைப் பயணத்தை தெரிந்து கொள்வதன் மூலம் அறியலாம்.

இறைவன் ஒளி பொருந்தியவன் என்பதை எல்லா மதங்களுமே குறிப்பிடுகின்றன. உண்மை அறிவு என்பது இறைவனின் பேரொளியில் அடங்கியுள்ளது என்பதாகும்.**"இறைவனே என்றுமுள்ள ஒளி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, ஒளியாகிய கடவுளிடமிருந்து நாம் ஒளி பெறுவதால், அவ்வொளியை பிறருக்கு ஆற்றும் நற்செயல்கள் வழியாக ஒளிரச் செய்வோம்" விவிலியத் தேடல், - திருப்பாடல் 36-3** என்றுரைப்பதன் மூலமும் இறைவன் ஒளி ரூபமானவன் என்பதை அறியமுடிகிறது.

சூரா நூரில் உள்ள வசனம் – **"அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் ஒளி" சூரா அந்நூரில் அல்லாஹ் குறிப்பிடுகிறான். மூசா அவர்கள் அல்லாஹ்வைக் காணவேண்டும் என்று கூறியபோது, அல்லாஹ் தனது ஒளியை மலையின் மீது சிறிது சிறிதாக வெளிப்படுத்தினார். அப்படி**

**வெளிப்படுத்தியதற்கே அந்த மலை மண்ணாகிப் போனது. மூஸா அவர்களும் மயக்கமடைந்தார். பின்னர் சுயநினைவு பெற்றபோது "உனேக்கே மகிமை உண்டாவதாக நான் மனந்திரும்புதலுடன் உன்னிடம் திரும்புகிறேன், மேலும நான் நம்பிக்கையாளர்களில் முதன்மையானவன்" என்று கூறினார். – சூரத் – அல் அராஃப் 7 வசனம் 143** என்று இஸ்லாம் மதத்திலும் இறைவன் ஒளி ரூபம் கொண்டவர் என்பது கூறப்பட்டுள்ளது. மணிவாசகப் பெருமான் இறைவனை விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் என்ற அடிகளும் இதனையே குறிப்பிடுகின்றது.

மனிதன் தன்னைத் தான் உணர்ந்து தன் அறிவை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் இறைவனை அடைய இயலும். அதற்காகவே மனிதனுக்கு ஆறாம் அறிவான பகுத்தறியும் அறிவைப் படைத்துள்ளான். பகுத்தறிவின் மூலம் ஆன்மீக அறிவை உணர்ந்து தயவு, கருணை, அருள் என்னும் மூன்று நிலைகளில் தன்னை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் இருள் என்னும் அறியாமை நீங்கி ஒளி என்னும் பேரறிவு புலப்படுகின்றது. இதனை வள்ளல் பெருமானும்,

**"கருணையும் சிவமேபொருள்எனக் காணும்**
**காட்சியும் பெறுகமற் றெல்லாம்**
**மருள்நெறி எனநீ எனக்கறிவித்த**
**வண்ணமே பெற்றிருக் கின்றேன்**
**இருள்நெறி மாயைவினைகளால் கலக்கம்**
**எய்தியதென் செய்வேன் எந்தாய்**
**தெருள்நிலை இன்றிக்கலங்கினேன் எனினும்**
**சிறுநெறி பிடித்ததொன்றிலையே" – திருவருட்பா பா.எ 35**

என்று கூறுகிறார். இதன்மூலம் மருள், இருள், தெருள் என்னும் தன்மையினைக் கருணையினால் மட்டுமே எய்துதல் இயலும் என்றும் மருட்சியை நீக்கும்போது நம்மைச் சூழ்ந்திருக்கும் இருள் விலகி இறையருள் பற்றியத் தெளிவினை உணர முடிகிறது.

**அண்டத்தின் அட்டமூர்த்தியே பிண்டத்தில்:**

அண்டத்தில் பிரகாசித்திருக்கும் இறைவனை பிண்டத்துள் காணுதலே அருட்பெறுநிலை என்கிறார். அதாவது **அண்டத்தில் அகம் – அக்னி, அகப்புறம் – சூரியன், புரம் – சந்திரன், புறப்புறம் – நட்சத்திரம் ஆகும். இதுவே பிண்டத்தில் அகம் – ஆன்மா, அகப்புறம் – சீவன், புறம் – மனம், புறப்புறம் – கண் முதலியன இந்திரியங்கள் ஆகும். – திருவருட்பா, இறைஞான சுத்த சித்தாந்தப் பாடல்கள் இவ்வகையில் அண்டத்தில் பரவியுள்ள இறைவனாம் ஒளியைப் பிண்டத்தில் புருவ மத்தியில் எழும்பச் செய்தலே 'சோதி நிலை' - வள்ளலார் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் ப 43** என்கிறார்.

இதில் குறிப்பிடப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆன்மா, சூரியன், சந்திரன் போன்றவைகளை இயக்கும் அட்டமூர்த்தி ஒளிமயமாக உடம்புக்குள் உறைகிறான் அவனை தியானித்து அவனுடன் கலத்தல் வேண்டும் என்பதை உணர்த்தவே மூன்றாவது கண் ரகசியம் புலப்படுகிறது. தனக்குள் தெளிவான சுய வெளிச்சம் உருவாக வேண்டுமெனில் எண்ண ஓட்டமின்றி வெறுமனே மனதை வைத்திருக்கும் ஒரு நிலையும் பேரானந்த நிலைக்குச் செல்ல வழிவகுக்கும். கோபம், பொறாமை, பயம், காமம், கவலை போன்ற எந்தவித எண்ணங்களுக்குள்ளும் சிக்காமல் வாழ்கின்ற நிலையாகும். அதனை திருவள்ளுவர்,

**"ஒளிஒருவற்கு உள்ளவெறுக்கை இளிஒருவற்கு**

**அஃதிறந்து வாழ்தும் எனல்" - குறள் 971**

ஒருவருக்கு ஒளியாகும் சுய வெளிச்சம் என்பது உள்ளத்தை வெறுமையாக வைத்துக்கொள்வது. ஒருவருக்கு இழிவானது வெறுமை இழந்து உள்ளத்து குமுறலுடன் வாழ்வது என்று குறிப்பிடுகிறார். ஆனந்தமயமாகத திகழும் இறைவனின் சொரூபமானது எங்குமே பிரகாசிக்கும் என்பதை,

**அங்கிங் கெனாதபடி எங்கும் ப்ரகாசமாய்**

**ஆனந்த பூர்த்தியாகி..... தாயுமானவர் பாடல்கள் பா.எ 1**

என்று குறிப்பிடுகையில் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் இறைவன் பிரகாசமாய் இருக்கிறான் என்தையே காட்டுகிறது. இதனையே மாணிக்கவாசகரும்,

**விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் – திருவாசகம் பா எ 23**

என்று சிவபெருமான் விண்ணிலும் பூமியிலும் பரந்து பிரபஞ்சம் முழுவதும் விளங்குகின்ற ஒளியாய் இருக்கிறான் என்பதையே காட்டுகிறது.

**"சுத்தமுமாய் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை**

**சுடராய் எல்லாம் – தாயுமானவர் பாடல்கள் பா எ 1**

தூய்மையானதாய் இருப்பது,சேய்மையும் அண்மையுமாய் இருப்பது, துரியச் சுடராய் எரிவது, ஆனந்தமயமானது, மன வாக்குக்கு எட்டாச் சித்துருவாய் விளங்குவது நலம் தரும் பேரொளி என்று தாயுமானவர் இறைவனின் பேரொளியானது துரியத்தில் இருப்பதை எடுத்துக்காட்டுகிறார். ஆஞ்ஞையில் இருக்கக்கூடிய மூன்றாவது கண் சுடரை குறிப்பிடுகிறார். இதனை இறைவனாக மாணிக்கவாசகர் குறிப்பிடுகையில்,

**மாசற்ற சோதி மலர்ந்த மலர்ந்த மலர்ச்சுடரே -** திருவாசகம் பா.எ 62

**"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!**

**நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே!**

**இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே!" - திருவாசகம் பா.எ 68 - 70**

என்பதில் ஒளிரூபமான இறைவன் உள்ளத்துள் நின்று உயிரோடு கலப்பவன் அவன் இன்பமும் துன்பமும் இல்லாதவன் **"மறைந்திட மூடிய மாய இருளை அறம் பாவம் எனும் அருங்கயிற்றால் கட்டி"** வைத்திருக்கும் மனித உடலில் பாவ புண்ணியங்களால் கட்டி வைக்கப்பட்டுள்ள சரீரத்தில் ஒளியாய் வீற்றிருக்கும் இறைவனை ஆஞ்ஞையில் இருக்கிறான்.

**"நதியுண்ட கடலெனச் சமயத்தை உண்டபர**

**ஞான ஆனந்த ஒளியே.." தாயுமான சுவாமி பா எ 10**

பல்வேறு சமயங்கள் அனைத்தும் புலப்படுத்துவது ஒன்றேயாம். நதிகள் எல்லாம் கடலில் சென்று கலப்பது போல் பல சமயங்களும் சொல்லும் ஒரே கருத்து ஞானம் ஒளி ஆனந்தம் என்பதேயாம் என்று உரைக்கின்றார். இதனை மாணிக்கவாசகர் குறிப்பிடுகையில்,

**"ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற**

**தோற்றச் சுடர்ஒளியா ய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்" பா.எ 83**

இன்பமாகிய ஆற்றுப் பெருக்கே அப்பனே மிகுந்து வளர்ந்து நிலைபெற நின்ற தோற்றத்தினையுடைய சுடரும் ஒளியாயும், சொல்லுதற்கு இயலாத நுண்ணிய உணர்வாயும் மாறுபாடுடைய இந்த உலகில் வேறு வேறாய் வந்து அறிவாய் விளங்கும் தெளிவானவனே! என்கிறார்.

**அறியாமை இருளை நீக்கும் ஒளி:**

இறைவன் ஒளி ரூபமானவன் என்பது பல மத நம்பிக்கைகளில் உள்ள ஒரு தத்துவமாக விளங்குகின்றது. இது இறைவனின் தெய்வீக தன்மையுடன் விளங்கி அறியாமை இருளை அகற்றும் பேரறிவைப் புலப்படுத்துகின்றது. ஒளி வடிவினனான இறைவன் ஆன்மாவில் உள்ள அறியாமை இருளை நீக்குவதன் மூலம் இம்மையில் நல்வாழ்வும் மறுமையில் முக்தியும் கிடைக்க வழி பிறக்கிறது. அதற்கு ஒரே வழி கருணையும் தயை சிந்தையும் இருத்தல் வேண்டும் என்பதை மாணிக்கவாசகர், வள்ளலார் போன்றோர் தன் அநுபூதியின் வாயிலாக எடுத்துக் காட்டுகின்றனர்.

தன் உடலை ஒளி ரூபமாக மாற்றி இறைவனோடு கலத்தல் என்பது மிக உயர்ந்த நிலையாகும். அதனை மரணமிலாப் பெருவாழ்வு என்பர். மாணிக்கவாசகர் சிவனோடு கலக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதனை **'யாத்திரைப் பத்து'** என்னும் பதிகத்தில், தில்லை நடராஜர் சந்நிதியில் சிவபெருமானோடு

ஜோதியில் கலப்பதற்குச் சற்று முன்னால் பாடியதாகக் கூறப்படுகிறது. இது ஆன்மா இறைவனோடு கலக்கும் இறுதி நிலையாகும்.

மணிவாசகப்பெருமான் முதலில் இறைவனை ஒளியாக வருணிக்கிறார். பிறகு ஆழ்ந்த தத்துவ அறிவை ஒளியாகக் கூறுவதோடு அதன் மூலம் அறியாமை இருள் நீங்கி தெளிவு பெறமுடியும் என்கிறார். அத்தகைய அறிவு பெறவேண்டுமெனில் உயிர்களிடத்தில் அன்பு இருத்தல் அவசியம். இத்தகைய அன்பின் வாயிலாக உள்ளத்தை உருக்கும் சக்தியானது இறைவனின் ஒளி ரூபமான உண்மைப் பொருளாக உணரப்படுகின்றது.

திருவாசகத்தில் இறைவன் அருட்பெருஞ்சோதி (பெரும் கருணை ஒளி) வடிவில் இருப்பதாக மாணிக்கவாசகர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். இதனை வள்ளலார் பாடல்களின் வழி நின்று விளக்கும்போது இறைவன் ஒளியின் சொரூபம் என்பது விளங்குகின்றது.

**திருவருட்பாவில் சோதி:**

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் சிவத்தை உணர்ந்ததாலேயே, பின்னாளில் இராமலிங்க வள்ளலார் இறைவனை அருட்பெருஞ் சோதி தனிப் பெருங்கருணை என்று குறிப்பிட்டார்.

**‘“ஆகம முடிமேல் ஆரண முடிமேல்**

**ஆகநின் றோங்கிய அருட்பெருஞ் ஜோதி” – திருவருட்பா பா எ 6**

ஆகமங்களின் முடிபுக்கும் வேதங்களின் முடிபுக்கும் மேம்பட்ட பரம்பொருளாக நிலையுற நின்று ஓங்குவது பரசிவமாகிய அருட்பெருஞ்சோதி

வேதங்களும், ஆகமங்களும் மிகப் பழமை வாய்ந்தது. அவற்றை ஆராய்ந்தோர் பலர் இருப்பினும். அவற்றை உணர்ந்தவர்கள் இறைவன் பேரொளியாளன் என்பதை முடிவாக உரைக்கும் வகையில், அருட்பெருஞ்சோதி என்று வள்ளலார் குறிப்பிடுகின்றார். வள்ளலாருக்கும் முன்பே வாழ்ந்துவந்த மாணிக்கவாசகரும் **“ஆகம மாகி நின்றண்ணிப்பான்”- சிவபுராணம் பா.எ 4** எனவும், **“வேதங்கள் ஐயா என வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே” - சிவபுராணம் பா.எ 35** எனவும் மணிவாசகர் உரைக்கின்றார்.

**இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்**

**அகமறப் பொருந்திய அருட்பெருஞ் ஜோதி - திருவருட்பா பா எ 8**

உரை இவ்வுலகத்தில் நிலைபெற்றுள்ள பொருளாயும் மேலுலகங்களில் நிலையாகவுள்ள பொருளாயும் குறைவறப் பரமாய்ப் பொருந்தியது மெய்ப்பொருளாகிய அருட்பெருஞ்சோதி.

இவ்வுலகத்தில் உள்ள பொருள்கள் அனைத்திலும் **"இகநிலைப் பொருளாய்"** நிலையாக இருந்தும், மேலுலகத்தில் உள்ள மெய்ப்பொருள்கள் அனைத்திலும் **"பரநிலைப் பொருளாய்"** நிலையாக இருந்தும் வழிகாட்டுகின்ற அருட்பெருஞ்சோதியானது நினைவு, சொல், செயல்களால் ஏற்படக்கூடிய பாவத்திற்கேற்ற குறைவு சிறிதுமின்றி நிறைவுடன் கலந்திருக்குமாறு அகமறப் பொருந்திய அருட்பெருஞ்சோதி என்று வள்ளலார் ஜோதி வடிவான இறைவனைப் பாடுகின்றார். இதனையே மணிவாசகப் பெருமான், **"ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே" – சிவபுராணம் பா எ 68** என்கிறார்.

**"உரைமனம் கடந்த ஒருபெரு வெளிமேல்**

**அரைசுசெய் தோங்கும் அருட்பெருஞ்சோதி – திருவருட்பா பா எ 12**

சொற்கள் செல்லும் எல்லையையும் மன நினைவு செல்லும் எல்லையையும் கடந்த நிலையாகிய ஒரு பெரிய வெளியின்கண் இருந்து அருளரசு புரிந்து ஓங்குவதாகிய அருட்பெருஞ்சோதி.

வாக்கு மனங்கட்கு எட்டாத நிலையை, **"உரை மனம் கடந்த ஒரு பெருவெளி"** என்று வள்ளலார் குறிப்பிடுகின்றார். **"மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே" – சிவபுராணம் பா எ 45** என்று மணிவாசகப் பெருமான் உரைக்கின்றார். அனைத்தும் சொல்லாற் சொல்லுதற்கு இயலாதொழிதலால் உரை மனம் கடந்த ஒரு பெருவெளி என்று கூறுகின்றார். மனத்தாலும் நினையவொண்ணாதது என்பதை இன்ன தன்மைத்தென **"எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி" – சிவபுராணம் பா எ 22** என்று மாணிக்கவாசகர் கூறுவதன் மூலம் இறைவன் அண்ட வெளிக்கு அப்பால் ஒளிரூபமாகத் திகழ்கிறான் என்பது உணரப்படுகின்றது,

**"ஏகம் அனேகம் எனப்பகர் வெளிஎனும்**

**ஆகமச் சிற்சபை அருட்பெருஞ் சோதி" பா எ 56**

பொருள்களின் தனித்தன்மை பற்றி ஒன்று என்றும் பலவென்றும் கூறுதற்கு ஏதுவாகிய அறிவு வெளி என அறிஞர் ஓதும் ஆகம ஞான சபைக்கண் விளக்கம் அருளுவது அருட்பெருஞ்சோதி

பரம்பொருளின் பரமாம் தன்மை கண்டு ஏகம் என்பதும் உயிர் வகைகளின் தனித்தனி இயல்புணர்ந்து அநேகம் என்பதும் ஆகம வுரைகளாதலால் ஏகாநேகம் எனவுணரும் ஞானத்தை **"ஆகமச் சிற்சபை"** என அறிவிக்கின்றார். இனி அநேகம் என்பதற்கு இறைவன் தன்னை யன்புற்று வழிபடும் அடியவர் பொருட்டுப் பல வுருக்கொள்வதால் அநேகமாக வுள்ளான் என்பதும் உண்டு என்பதை அருட்பிரகாச வள்ளலார் விளக்குகிறார். இதனை மணிவாசகப் பெருமானின் கூற்றில் காண்கையில்,

**"ஏகன், அநேகன், இறைவனடி வாழ்க!" - சிவபுராணம் பா எ 5** என்கிறார். **"ஒருவனே இராவணாதி பாவக முற்றாற் போலத் தருவன் இவ்வுருவமெல்லாம் தன்மையும் திரியானாகும்"** என்று சிவ சித்தியார் நூலில் அருள்நந்தி சிவனார் குறிப்பிடுகின்றார்.

**காணும் ஒளியானவன் காட்டும் ஒளியாகிறான்:**

மாணிக்கவாசகர் இறைவனை ஒளி ரூபமாகவும் ஏகன் அநேகனாகவும் இருக்கிறான் என்பதை விளக்குகின்றார். இயற்கைப் பொருள்களுக்கு அதன் தன்மையைத் தரக்கூடியவனும் இறைவனே என்பதை விளக்குகையில்,

**"நாடொறும் அருக்கனிற் சோதி அமைத்தோன்"- திருவண்டப்பகுதி பா எ 20**

அருக்கன் என்றால் சூரியன் என்பதாகும். அருக்கனாகிய சூரியனில் இறைவன் நாடோறும் கனன்றெழும் சோதியை அமைக்கின்றானாம். எனவேதான் சூரியன் தனது வெப்ப நிலையை இழக்காமல் இருக்கிறது என்று உரைக்கின்றார்.

இனி அடுத்து மாணிக்கவாசகர் சந்திரனைக் கூறுகிறார் சந்திரனில் தண்மை தனை வைத்தவன் இறைவன் என்று கூறுகையில், **"திருத்தகு மதியில் தண்மை வைத்தோன்" – திருஅண்டப்பகுதி பா.எ 21** சந்திரனில் குளிர்ச்சியை இறைவன் வைத்தார் என்கிறார்.**"பொய் தீரு வானிற் கலப்பு வைத்தோன்" – திரு அண்டப்பகுதி பா.எ 23** என்றும் குறிப்பிடுகிறார். ஆகாயத்தில் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஒவ்வொன்றிலும் அதன் தன்மைகளை அவற்றுள் வைத்தவன் இறைவன் என்ற மாணிக்கவாசகர் கூற்றை வள்ளலார் குறிப்பிடுகையில்,

**"நீரிடை ஒளி இயல் நிகழ்பல குண இயல்**
**ஆர்தர வகுத்த அருட்பெருஞ்சோதி" – திருவருட்பா பா எ 418**

என்கிறார். நீரில் நடக்கும் ஒளி முறிவு நிகழ்ச்சியை மாணிக்கவாசகர் பாடுகையில், **"நிழல் திகழ் நீர்"** என்று கூறுகிறார். சூரியன், சந்திரன், ஐம்பூதங்கள் ஆகியவைகள் அதன் நிலையில் இருப்பதற்கு இறைவனே காரணம் என்று விளக்குகிறார். இறைவன் பிரபஞ்சத்திற்கு உரிய இருளுக்கும் வெளிச்சத்துக்கும் அப்பாற்பட்ட, நிலையான பரமாத்ம ஒளியாக இருக்கிறார்.

**"சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே" பா எ 72**

ஒளி வடிவானவனே செறிந்த இருளாய் இருப்பவனே தோன்றாத பெருமை உடையவனே என்றும்,

**"காக்குமெங் காவலனே! காண்பரிய பேரொளியே**
**ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற**

**தோற்றச் சுடரொளியாய்ச், சொல்லாத நுண்ணுணர்வாய்...”**

**- திருவாசகம் பா.எ 78 - 80**

இறைவன் நுண்ணுர்வாய் இருக்கும் தனமையினை சொல்லமுடியாது என்கிறார்.

புறக் கண்களால் காண முடியாத இந்த சோதி தரிசனத்தை, குருவின் அருளால் (இறைவன்) அகக் கண்களால் காண முடியும் என்று திருச்சதகப் பாடல்களில மாணிக்கவாசகர் பாடுகிறார். திருவாசகத்தில் சோதி என்பது வெறும் பௌதீக ஒளியைக் குறிக்காமல் அறியாமை இருளை நீக்கி, பேரின்பத்தை வழங்கும் இறைவனின் ஞான ஒளி என்ற உண்மையை உணர்த்துகிறார்.

**அருளுடைச் சுடரே!அளிந்த தோர் கனியே!**

**பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே! – திருவாசகம் பா.எ 538**

அருள் தரும் சுடர் தவம் செய்பவர்களுக்கு அரசனாக இருப்பவன் இருள் நிறைந்த அறியாமையில் இறைவனைப் பிடித்தால் ஒளி தருவான்.

**இருளிடத்து, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**

**எங்கு எழுந்தருளுவது இனியே? - திருவாசகம் பா.எ 538**

பிறவித் துயரிலிருந்து விடுபட்டு, இறை அருளால் வாழ்வில் ஒளி பெறுவதையும் விளக்குகின்றார்.

**இறைவனின் உண்மை ஒளி:**

**“வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா**

**பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி**

**மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!”... திருவாசகம் பா.எ 38**

வெப்பமுடையவனே, குளிர்ச்சியுடையவனே உயிரானவனே குற்றமற்றவனே, பொய்யானவை எல்லாம் அகன்று போக எழுந்தருளிவந்து, மெய்ஞானம் ஆகி நின்று ஒளி மின்னும் உண்மை விளக்கே.

மனிதனுக்கு இறைஞானம் பற்றிய உணர்வு இடையிடையே வந்துபோவதுண்டு அதுதான் மிளிர்கின்ற மெய்ச்சுடராகும். **“மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே”சிவபுராணம் பா.எ 64** களங்கமில்லாத விரிந்த அழகிய மலரின் ஒளியே என்று இறைவனைப் போற்றுகையில், மனிதனுக்குள் மின்னுகின்ற ஒளியாக இருப்பவன், மலர்ந்த மலர்ச்சுடராக அண்டத்திற்கு அப்பாலும் இருக்கிறான் என்பது புலப்படுகிறது.

**“ஊன் வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து**

**தேன்வந் தமுதின் தெளிவின் ஒளிவந்த**

**வான்வந்த வார்கழலே பாடுதும் காண் அம்மானாய்...” - திருவாசகம் பா.எ 178**

என் சரீரத்தினுள் பிரவேசித்து, மயிர்க்கால்களின் உள்ளே உயிர்ப்பை எய்துவிக்கின்ற இனிமை பொருந்திய அமு த த்தின் தெளிவைப் போன்றவனாவான். அந்தச் சிவபெருமானுடைய ஒளி பொருந்திய மேன்மை தங்கிய நீண்ட திருவடிகளைப் பாடுவோமாக! என்று கூறுவதன் மூலமாக சிவபெருமானாகிய இறைவன் ஒளி பொருந்திய ரூபமானவன் அவன் அண்டத்திற்கு அப்பாலிருந்து கொண்ட பஞ்சபூத சக்தியைக் கொடுத்து இயக்குகின்றான் என்பது அறியப்படுகின்றது.

**முடிவுரை:**

பஞ்சபூதங்களை இயக்கி உயிரினங்களுக்குள்ளும் இருந்து இயக்கும் இறைவனானவன் எப்படி இருப்பான் என்ற ஐயத்தை நீக்கும் வகையில் பேரண்டங்களுக்கு அப்பால் ஒளி ரூபமாக இருப்பவன் இறைவன் அவன் பேராற்றலும் பேரறிவும் கொண்டவன் என்பது திருவாசக வரிகளால் உணரப்படுகிறது. அத்தகைய இறைவனோடு கலத்தல் என்பது எளிமையான அன்பின் மூலமே என்பதை மணிவாசகப் பெருமானின் வாழ்க்கைப் பயணத்தினால் அறியமுடிகிறது. மேலும் உண்மையான மெய்ப்பொருள் ஒளியே என்பது அறியப்படுகின்றது.

**குறிப்பு நூல்கள்:**


1. கவிஞர் பத்மதேவன் (உ.ஆ), திருவாசகம் மூலமும் உரையும், கற்பகம் புத்தகாலயம், தியாகராய நகர், சென்னை – 17, பதிப்பு - 2015
2. திருவிவிலியம் பால்கோ புத்தக நிலையம் சென்னை, தமிழ் கத்தோலிக்க சபை பதிப்பு – 2008
3. இராமலிங்க அடிகள், திருவருட்பா, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்,சிதம்பரம் பதிப்பு - 1983
4. பா.கமலக்கண்ணன், தாயுமானவர் பாடல்கள் மெய்ஞ்ஞானத் திரட்டு, வானதி பதிப்பகம், சென்னை பதிப்பு - 2019
5. க.மோகனா, முனைவர் பட்ட ஆய்வாளர், வள்ளலார் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள், ஆய்த எழுத்து, பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், வெளியீடு அக்டோபர் – 2018
6. ஸையித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்), திருக்குர் ஆன் தமிழாக்கம், இஸ்லாமிய சேவா அறக்கட்டளை, பதிப்பு - 1996
7. திருவள்ளுவர், திருக்குறள், தென்றல் நிலையம், சிதம்பரம் 01, ஆறாம் பதிப்பு – 2003


**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.